**ஏப்ரல் – 15**

# தேசியச் செய்திகள்

## சுசில் சந்திரா

- தற்போதைய தேர்தல் ஆணையரான (Election Commissioner) சுசில் சந்திரா அடுத்த இந்தியத் தலைமை தேர்தல் ஆணையராக (Chief Election Commissioner - CEC) நியமிக்கப் பட்டுள்ளார்.
- இவர் இந்தியக் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் அவர்களால் இந்தியாவின் 24வது தலைமை தேர்தல் ஆணையராக நியமிக்கப் பட்டார்.
- இவர் தற்போதைய இந்தியத் தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோராவை அடுத்து பதவி ஏற்க உள்ளார்.
- இந்தியத் தேர்தல் ஆணையமானது தலைமை தேர்தல் ஆணையர், இரண்டு தேர்தல் ஆணையர்கள் என்று மூன்று உறுப்பினர்களைக் கொண்டது.
- இவர் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்குத் தலைமையேற்கும் இரண்டாவது இந்திய வருவாய்ப் பணி (IRS) அலுவலர் ஆவார்.
- இந்தப் பொறுப்பிற்கு நியமிக்கப்பட்ட முதல் இந்திய வருவாய்ப் பணி அலுவலர் S. கிருஷ்ணமூர்த்தி ஆவார்.
- இவர் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலை, 13வது தலைமை தேர்தல் ஆணையராக மேற்பார்வையிட்டார்.

## ஸ்புட்னிக் V

- ரஷ்யாவின் ஸ்புட்னிக் V எனப்படும் தடுப்பூசியினை அவசரகாலப் பயன்பாட்டிற்கு உபயோகிப்பதை அங்கீகரிக்க இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டகம் (Drugs Controller General of India – DCGI) ஒப்புதல் அளித்துள்ளது.
- கோவிசீல்ட் மற்றும் கோவேக்சின் ஆகியவற்றையடுத்து இந்த தடுப்பு மருந்தானது அவசரகாலப் பயன்பாட்டிற்கு என்ற கட்டுப்பாட்டகத்தினால் அங்கீகரிக்கப் பட்ட மூன்றாவது தடுப்பூசியாகும்.
- இதுபற்றி கோவிட்-19 தொற்றுக்கான தடுப்பூசி நிர்வகிப்பு மீதான தேசிய நிபுணர் குழுவின் சந்திப்பில் (National Expert Group on Vaccine Adminsitration for Covid – 19 NEGVAC) விவாதிக்கப்பட்டது.
- இக்குழுவின் தலைவர் நிதி ஆயோக்கின் உறுப்பினர் (சுகாதாரம்) VK. பால் ஆவார்.
- ஸ்புட்னிக் V தடுப்பூசியானது கடந்த ஆண்டு ரஷ்யாவினால் உருவாக்கப்பட்டது.
- ரஷ்யாவின் தடுப்பூசியை உபயோகிக்க பதிவு செய்த அதிக மக்கட்தொகையுடைய நாடு இந்தியாவாகும்.
- ஸ்புட்னிக் V தடுப்பூசிக்கு ஒப்புதல் வழங்கிய 60வது நாடு இந்தியா ஆகும்.
- ஸ்புட்னிக் V தடுப்பூசியை உற்பத்தி செய்வதற்கான ஒரு முன்னணி உற்பத்தி மையமாகவும் இந்தியா உள்ளது.
- மேலும் ஹைதரபாத்தில் அமைந்துள்ள டாக்டர் ரெட்டி ஆய்வகம் என்ற மருந்து நிறுவனம், இந்தியாவில் இந்தத் தடுப்பூசியை உற்பத்தி செய்து வழங்குவதற்காக ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
- கொரோனா வைரசுக்கு எதிராக தடுப்பூசியைப் பதிவு செய்த (ஆகஸ்ட் 2020) உலகின்

முதல் நாடு ரஷ்யாவாகும்.

### ரைசினா பேச்சுவார்த்தை 2021

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 6வது ரைசினா பேச்சுவார்த்தையைத் தொடங்கி வைத்தார்.
- இதில் டென்மார்க்கின் பிரதமர் மெட்டே பிரட்ரிக்சென் மற்றும் ருவாண்டாவின் அதிபர் பால் ககாமே ஆகியோர் காணொலி மூலம் பங்கேற்றனர்.
- மேலும் ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசனும் இதில் பங்கேற்றார்.
- இப்பேச்சுவார்த்தை புவிசார் பொருளாதாரம் மற்றும் புவிசார் அரசியல் போன்றவை மீதான இந்தியாவின் முதன்மை மாநாடாகும்.
- 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகிறது.
- இது வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் அப்சர்வர் ரிசர்ச் பவுண்டேசன் என்ற அறக்கட்டளை ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்படுகிறது.

## சர்வதேசச் செய்திகள்

### லிட்டில் குரு




- “லிட்டில் குரு” எனப்படும் சமஸ்கிருதம் கற்கும் செயலி இந்திய உயர் ஆணையத்தின் (High Commission India) இந்திரா காந்தி கலாச்சார மையத்தினால் (IGCC) வங்காள தேசத்தில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்த சமஸ்கிருதம் கற்கும் செயலியானது இந்தியக் கலாச்சார உறவுகள் மன்றத்தினால் (ICCR) நடத்தப்படும் பிரச்சாரத்தின் ஓர்அங்கமாகும்.
- இந்த செயலி விளையாட்டு முறையில் அமைந்த உலகின் முதல் சமஸ்கிருதம் கற்கும் செயலியாகும்.
- உலகம் முழுவதும் உள்ள மாணவர்கள், சமய அறிஞர்கள், இந்திய இலக்கிய ஆசிரியர்கள் (Indologists) மற்றும் வரலாற்றாசிரியர்கள் ஆகியோரிடையே சமஸ்கிருத மொழியை ஊக்குவிப்பதை இந்த செயலி நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## ஆஹார் கிராந்தி

- சீரான ஊட்டச்சத்துடைய உணவின் தேவையைப் பற்றிய ஒரு விழிப்புணர்வைப் பரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- அனைத்து உள்ளூர் பழங்கள் மற்றும் காய்கறிகளை எளிதாக பெறுவதின் முக்கியத்துவத்தை உணரச் செய்வதும் இதன் நோக்கமாகும்.
- இத்திட்டம் விஞ்ஞான பாரதி (விபா) மற்றும் உலகளாவிய இந்திய அறிவியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் மன்றம் (Global Indian Scientist and Technocrats forum – GIST) ஆகியவற்றால் தொடங்கப்பட்டது.
- இதன் குறிக்கோள், “நல்ல உணவு – நல்ல அறிவாற்றல்” என்பதாகும்.
- “ஏராளமாக நிலவும் பசி மற்றும் நோய்கள்” என்றழைக்கப்படும் இந்தியாவும் ஒட்டு மொத்த உலகமும் எதிர்கொள்ளும் வித்தியாசமானப் பிரச்சினையை எதிர்கொள்ளச் செய்வதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- மேலும் 2021 ஆம் ஆண்டினை, சர்வதேசப் பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆண்டாகவும், ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.
- ஐ.நா.வின் 3வது நீடித்த மேம்பாட்டு இலக்கு, அனைத்து வயதினருக்கும் ஆரோக்கியமான வாழ்வு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதலை உறுதி செய்தல் என்பதை வலியுறுத்துகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## காமா கதிரினை வெளியிடும் அண்டம்

- இந்திய ஆராய்ச்சியாளர்கள் அரிதான மற்றும் வெகு தொலைவில் அமைந்த காமா கதிரினை வெளியிடும் அண்டம் ஒன்றினைக் கண்டறிந்துள்ளனர்.
- புதிதாக கண்டறியப்பட்ட அந்த அண்டத்திற்கு NLS1 (குறுகிய பட்டையுடைய செய்பெர்ட் 1 – Narrow Line Seyfert 1) அண்டம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த அண்டங்கள் AGN (Active Galactic Nuclei) அல்லது செயல்பாட்டிலுள்ள அண்டம் சார்ந்த அணுக்கருக்கள் என்று வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- சாதாரணமான அண்டங்களுடன் ஒப்பிடுகையில், இவை ஆயிரம் மடங்கு ஆற்றலை வெளியிடும்.
- நுண்ணலை, ரேடியோ, அகச்சிவப்பு, ஒளி அலை, X-கதிர், புற ஊதா மற்றும் காமா கதிர் போன்ற அலைக்கற்றை வடிவில் கண்டறியப் பட்டுள்ள இந்த துடிப்பான அண்டங்களின் உமிழ்வுகள் விண்மீன் சாராத (வெப்பமற்ற) வகையைச் சார்ந்தவை ஆகும்.
- அமெரிக்காவின் ஹவாயில் அமைந்துள்ள நிலத்தில் அமைந்த உலகின் மிகப்பெரிய தொலைநோக்கிகளுள் ஒன்றான சுபாரு தொலைநோக்கி இதற்குப் பயன்படுத்தப் பட்டது.
- பேரண்டம் சுமார் 4.7 பில்லியன் ஆண்டுகள் என்ற வயதில் இருந்த போது தான் இந்த அண்டம் உருவாகியுள்ளது.
- பேரண்டத்தின் தற்போதைய வயது 13.8 பில்லியன் ஆண்டுகளாகும்.
- நைனிடாலிலுள்ள ஆர்யபட்டா அறிவியல் அராய்ச்சி கண்காணிப்பு நிறுவனத்தின் (Aryabhatta Research Institute of Observational Science – ARIES) அறிவியலாளர்களால் இது

கண்டறியப் பட்டது.

- இது இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும்.

***Redshift (சிவப்புப் பக்க பெயர்ச்சி)***

- 1929 ஆம் ஆண்டில் எட்வின் ஹப்பில் என்பவர் பேரண்டம் விரிவடைகிறது என்று அறிவித்ததிலிருந்து அண்டங்கள் நம்மிடமிருந்து விலகிச் செல்கின்றன என்பது கவனத்தில் கொள்ளப் பட்டது.
- இவ்வாறு குறுகிக் கொண்டே வரும் அண்டங்களிலிருந்து வரும் அலைநீள வடிவிலான ஒளியானது சிவப்புப் பக்கப் பெயர்ச்சி எனப்படுகிறது.
- அதாவது அண்டங்கள் எவ்வளவு தொலைவில் உள்ளதோ அதைப் பொறுத்து ஒளியின் அலைநீளம் சிவப்பாகவும் சிகப்புப் பக்கப் பெயர்ச்சியின் மதிப்பு அதிகமாகவும் இருக்கும்.
- அத்தகைய அண்டங்கள் சிவப்புப் பக்கப் பெயர்ச்சி அண்டங்கள் என வகைப்படுத்தப் பட்டுள்ளன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## டூம்ஸ்டே பனிப்பாறை

- இது த்வைட்ஸ் பனிப்பாறை எனவும் அழைக்கப்படுகிறது.
- இது அண்டார்டிகாவில் அமைந்துள்ளது.
- இது 120 கி.மீ. அகலமுடையது.
- இப்பனிப்பாறை முன்பு எதிர்பார்க்கப் பட்டதை விட விரைவாக உருகி வருகிறது.
- அதன் அளவு (1.9 லட்சம் சதுர கி.மீ) காரணமாக, உலகின் கடல் மட்டத்தை 10 அடி உயர்த்தும் அளவிற்கு இது நீரினைக் கொண்டுள்ளது.




## செயின்ட் வின்சென்ட் தீவு

- சமீபத்தில் லா சாஃப்ரியரி என்ற ஒரு எரிமலை வெடித்துச் சிதறியது.

- இந்த எரிமலையானது செயின்ட் வின்செண்ட் மற்றும் கிரினெடைன்ஸ் ஆகிய தீவுகளை சாம்பலாலும் எரிமலை சிதைவுப் பொருட்களாலும் சூழும் வகையில் தீவிரமாக வெடித்து வருகிறது.
- செயின்ட் வின்செண்ட் கரீபியன் கடலிலுள்ள ஒரு எரிமலைத் தீவு ஆகும்.
- இது கரீபியன் கடலிலுள்ள அந்த நாட்டின் மிகப்பெரிய தீவு ஆகும்.

Caribbean volcano erupts




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பூனம் குப்தா

- கொள்கை சார்ந்த ஆலோசனை வழங்கும் (think tank) தேசியப் பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சி மன்றத்தின் (National Council of Applied Economic Research – NCAER) புதியப் பொது இயக்குநராக பூனம் குப்தா பொறுப்பேற்க உள்ளார்.
- இப்பதவியை வகிக்கும் முதல் பெண் இவராவார்.
- NCAER வளாகத்திற்கு 1959 ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று ஜவஹர்லால் நேரு அடிக்கல் நாட்டினார்.

## BAFTA விருதுகள் 2021

- 2021 ஆம் ஆண்டிற்கான பிரிட்டிஷ் அகாதமி திரைப்பட விருதுகள் (BAFTA) பிரிட்டிஷ் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனமான BAFTA அமைப்பினால் (British Academy of Film and Television) அறிவிக்கப் பட்டுள்ளது.
- ஆஸ்காருக்கு இணையான இந்த பிரிட்டிஷ் விருதுகள் தேசிய மற்றும் சர்வதேச திரைப்படத் துறையில் சிறந்து விளங்குவோருக்கு வழங்கப்படும்.
- சிறந்த திரைப்படம் – Nomadland.
- சிறந்த இயக்குநர் – சாலி சாவோ (Nomadland).




## இந்தியப் பெண் மல்யுத்த வீராங்கனைகள் – டோக்கியோ ஒலிம்பிக்கிற்குத் தேர்வு

- நடைபெறவிருக்கும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்குத் தேர்வாகியுள்ள முதல் இந்திய இளம் பெண் மல்யுத்த வீராங்கனை சோனம் மாலிக் ஆவார்.
- இவர் ஹரியானாவைச் சேர்ந்த இந்தியப் பெண் மல்யுத்த வீராங்கனையாவார்.
- ஹரியானாவைச் சேர்ந்த அன்சு மாலிக் என்பவரும் இப்போட்டிக்குத் தேர்வான மற்றொரு பெண் மல்யுத்த வீராங்கனையாவார்.
- இருவரும் கசகஸ்தானின் அல்மேட்டி நகரில் நடைபெற்ற ஆசிய ஒலிம்பிக் தகுதிப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- வினேஷ் போகத் ஏற்கனவே ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தேர்வாகியுள்ளார்.
- அதிகாரப்பூர்வமாக XXXII ஒலிம்பியாய்டு போட்டிகள் மற்றும் 2020 கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள் (அ) டோக்கியோ 2020 என அழைக்கப்படும் 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் ஒரு சர்வதேச பலதரப்பட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★